Written by Administrator
Thursday, 03 September 2009 17:11 -

□□□□□□□□03.09.2009

பயனாளிகள் பட்டியலில் விதிமுறை மீறல்

குடிசை மேம்பாடு திட்டப்பணிகள் ஆய்வு

கமிஷனர் உத்தரவு

கோவை, செப். 3:கோவை மாநகராட்சியில் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலில் விதிமுறை மீறல் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை ஆய்வு செய்ய மாநகராட்சி கமிஷனர் அன்சல்மிஸ்ரா உத்தரவிட்டுள்ளார்.

கோவை மாநகராட்சி பகுதியில் குடிசை மேம்பாட்டு திட்டம் 3 பகுதிகளாக நடக்கிறது. 173 குடிசைப்பகுதியில் 18,567 வீடு கட்ட இடம் தயாரிக்கப்பட்டது.

தற்போது முதல் கட்டமாக 18 குடிசைப் பகுதியில் 2707 வீடுகளும், இரண்டாம் கட்ட மாக ரூ.99.94 கோடி மதிப்பில் 63 குடிசைப்பகுதியில் 9923 வீடுகளும் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது.

ஒரு வீடு கட்ட 160 லட்ச ரூபாய் இட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மொத்த தொகையில் பயனாளிகள் பங்களிப்பு 15 சதவீதம். பணிக்குக் ஏற்ப 4 தவணையில் இட்ட தொகை வழங்கப்படுகிறது. குடிசை பகுதி மேம்பாட்டு திட்ட பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நேற்று மாநகராட்சி அலுவலகத்தில் நடந்தது. இதில் கமிஷனர் அன்சல் மிஸ்ரா, ஜவகர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்பு திட்ட மேற்பார்வை பொறியாளர் பூபதி, செயற்பொறியாளர்கள் லட்சுமணன், திருமாவளவன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இத்திட்டப் பணியில் குடிசைப்பகுதிகளில் வரைக் செய்ப்பு முறையாக நடக்கவில்லை. பட்டா இல்லாத பல வீடுகளை பட்டியலில் சேர்த்திருப்பதாகவும், வில்லங்கம், ஆக்கிரமிப்பு உள்ள இடத்தையும் பயனாளி கள் பட்டியலில் சேர்த்திருப்பதாகவும் கண்டறியப்பட்டது.

முறைகேடாக சேர்க்கப்பட்ட வீடுகளை பட்டியலில் இருந்து நீக்கலாமா, பட்டா இல்லாத வீடுகளுக்கு மாற்று திட்டமாக என்ன செய்வது என விவா திக்கப்பட்டது.

அன்சல் மிஸ்ரா, ஜவகர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்பு திட்ட மேற்பார்வை பொறியாளர் பூபதி, செயற்பொறியாளர்கள் லட்சுமணன், திருமாவளவன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இத்திட்டப் பணியில் குடிசைப்பகுதிகளில் வரைக் செய்ப்பு முறையாக நடக்கவில்லை. பட்டா இல்லாத பல வீடுகளை பட்டியலில் சேர்த்திருப்பதாகவும், வில்லங்கம், ஆக்கிரமிப்பு உள்ள இடத்தையும் பயனாளி கள் பட்டியலில் சேர்த்திருப்பதாகவும் கண்டறியப்பட்டது.

திட்ட அதிகாரிகள் ஏன் முன்கூட்டியே இதை கண்டறியவில்லை. பட்டா இல்லாத வீடுகளுக்கு எப்படி நிதி ஒதுக்கீடு செய்யமுடியும் என கமிஷனர் கேள்வி கேட்டார்.

முறைகேடாக சேர்க்கப்பட்ட வீடுகளை பட்டியலில் இருந்து நீக்கலாமா, பட்டா இல்லாத வீடுகளுக்கு மாற்று திட்டமாக என்ன செய்வது என விவா திக்கப்பட்டது.

முறைகேடாக எத்தனை இடத்தில் வீடு கட்டப்பட்டுள்ளது, கட்டு மான பணிகள் எந்த கட்டத்தில் இருக்கிறது என ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டது.

மாநகராட்சி கமிஷனர் அன்சல் மிஸ்ரா கூறுகையில், "குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில் 300க்கும் மேற்பட்ட கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பட்டா இல்லாத குடிசைகள் அப்பகுதியில் வீடு கட்ட அனுமதிக்கமுடியாது. பயனாளிகள் பட்டியலில் உள்ளவை சரியானது தானா, விதிமுறை மீறல் இருக்கிறதா என ஆய்வு நடக்கிறது.

சில குடிசைகள் விவரங்க தீர்வையில் இருக்கிறது என்ன செய்வதென யோசிக்கிறோம்," என்றார்.